01.08.2025 S.C.No.138 of 2017 P.W.53 – Chandrasekaran

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

(A1 to A5 present. A6 absent and his absence condoned as u/s 317 Cr.P.C. petition filed and allowed.)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி தொடங்கிய நேரம் மதியம் 02.20 P.M.

**5 மற்றும் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கே: மறுவழக்கு பதிவு என்றால் என்ன என்பதை விளக்குங்கள்?

ப: உள்ளூர் காவல் நிலையத்திலிருந்து உத்தரவின்படி விசாரணை மேற்கொள்ளக்கூடிய சிபிசிஐடி பிரிவுக்கு மாற்றும்போது அங்கு பதிவு செய்யக்கூடிய அதே வழக்கு மறுவழக்கு பதிவு ஆகும்.

கே: குற்ற எண் 158/2015 என்ற எண்ணிலேயே வழக்கு பதிவு செய்திருக்கலாம் புதிதாக குற்ற எண் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன?

ப: எங்களுடைய சிபிசிஐடி பிரிவின் மூலமாக மறு வழக்கு பதிவு செய்யப்பட்டதால் வரிசைப்படியாக குற்ற எண் கொடுக்கப்பட்டது.

கே: இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் அனுமதி பெற வேண்டிய அவசியம் உள்ளதா என்றால்?

ப: அது குறித்து எனக்கு சரியாக தெரியாது.

கே: குற்ற எண் 158/2015 என்ற வழக்கானது எந்த வழக்குடன் தொடர்புடையது என்றால்?

ப: ஷமீல் பாஷா இறப்பு தொடர்பானது.

கே: குற்ற எண் 158/2015 என்ற வழக்கானது மற்றொரு எந்த வழக்குடன் தொடர்புடையது என்றால்?

ப: இது தனி வழக்கு.

கே: குற்ற எண் 158/2015 என்ற வழக்கானது ஷமீல் பாஷா இறப்பு சம்பந்தமாக விசாரிக்கப்பட்ட வழக்கு என்றால்?

ப: சரிதான்.

கே: ஷமீல் பாஷா எந்த விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்டு அவர் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது என்றால்?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 140/2015.

கே: குற்ற எண் 140/2015 வழக்கு எது சம்பந்தப்பட்ட வழக்கு என்றால்?

ப: பவித்ரா என்ற பெண் காணவில்லை என்பது தொடர்பான வழக்கு.

கே: Woman missing என்பது Bailable offence என்பதால் அதை விசாரிக்கக்கூடிய அதிகாரி உதவி ஆய்வாளர் மட்டும்தான் என்றால்?

ப: சரியல்ல. காவல் ஆய்வாளர்தான் விசாரிக்க வேண்டும்.

கே: குற்ற எண் 140/2015 வழக்கில் விசாரணை அதிகாரியாக கையொப்பமிட்டிருப்பது எஸ்எஸ்ஐ ரவி அவர்கள்தான் என்றால்?

ப: சரிதான்.

கே: ஒரு இடத்தில் கூட காவல் ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றும் நான் பொய் சொல்கிறேன் என்றால்?

ப: சரியல்ல. அந்த வழக்குக்கோப்பில் காவல் ஆய்வாளர் விசாரித்ததாக குறிப்புகள் எதுவும் இல்லை.

கே: மறுவழக்கு குற்ற எண் 5/2015 என்ன காரணத்திற்காக விசாரிப்பதற்காகவா அல்லது தவறை சரி செய்வதற்காக பதிவு செய்யப்பட்டதா என்றால்?

ப: விசாரிப்பதற்காக.

கே: அப்படி விசாரணைக்காக பதிவு செய்யப்பட்டிருந்தால் குற்ற எண் 158/2015 ல் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரையும் எங்கள் காவல் நிலைய குற்ற எண் 5/2015 ல் கண்டிப்பாக விசாரித்திருக்க வேண்டும் என்றும் அவர்களை நான் விசாரணை செய்தேனா என்றால்?

ப: எனக்கு முந்தைய விசாரணை அதிகாரியால் விசாரிக்கப்பட்ட சாட்சிகளை நான் விசாரிக்கவில்லை. மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு தொடர்ந்து விசாரணை மேற்கொண்டேன்.

கே: குற்ற எண் 140/2015 தொடர்புடைய சாட்சிகள் அனைவரையும் நான் விசாரணை செய்தேனா அல்லது எனக்கு முன்பு விசாரணை செய்த அதிகாரி விசாரணை செய்தாரா என்றால்?

ப: சில சாட்சிகளை எனக்கு முந்தைய விசாரணை அதிகாரி விசாரித்துள்ளார்.

கே: குற்றவியல் நடைமுறை சட்டப்படி வழக்குக்கோப்பு தன்னிடம் வரப்பெற்ற பிறகு அனைத்து சாட்சிகளையும் விசாரித்திருக்க வேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால்?

ப: வழக்கு தொடர்புடைய சாட்சிகளை விசாரிக்க வேண்டும்.

கே: குற்ற எண் 140/2015 மற்றும் குற்ற எண் 158/2015 வழக்கில் கண்ட சாட்சிகளில் நான் விசாரிக்காத சாட்சிகள் விசாரிக்க தகுதி அற்றவர்களா என்றால்?

ப: அவர்கள் ஷமீல் பாஷா இறப்பு தொடர்பாக சம்பந்தப்படாதவர்கள்.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் 15.06.2015 முதல் 19.06.2015 வரை பணிபுரிந்த காவலர்கள், அதிகாரிகள், காவல் நிலையம் சம்பந்தப்பட்டவர்கள் ஆகியோர்களை நான் கண்டிப்பாக விசாரணை செய்திருக்க வேண்டும் என்றால்?

ப: விசாரிக்கப்பட்டுள்ளனர். நான் சில சாட்சிகளை விசாரணை செய்துள்ளேன்.

கே: டிஎஸ்பி கணேசனை தாங்கள் விசாரணை செய்துள்ளீர்களா?

ப: விசாரணை செய்தேன்.

கே: டிஎஸ்பி கணேசன் அவர்களின் Controll–ல் தான் Special team and Shadow duty ஆகியவைகள் இருந்தது என்றால்?

ப: ஆமாம்.

கே: 15.06.2015 முதல் 19.06.2015 வரை டிஎஸ்பி கணேசனிடம் குற்ற எண் 206/2015 மற்றும் குற்ற எண் 208/2015 என்ற வழக்குகளில் வழக்கு சம்பந்தமாக விசாரிப்பதற்காக எதிரிகள் 1 முதல் 6 வரை பணிபுரிந்துக்கொண்டிருந்தார்கள் என்றால்?

ப: குற்ற எண் 208/2015 வழக்கில் 16.06.2015 முதல் குறிப்பிட்ட அந்த தேதி வரை தனி அலுவலாக சிறப்பு குழுவில் பணியாற்றியுள்ளார்கள்.

கே: குற்ற எண் 206/2015 மற்றும் குற்ற எண் 208/2015 வழக்கு சம்பந்தப்பட்ட Case diary ஐ கைப்பற்றினீர்களா என்றால்?

ப: எங்கள் சிபிசிஐடி குற்ற எண் 208/2015 வழக்கானது மறுவழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வழக்கின் Case diary கைப்பற்றவில்லை.

கே: குற்ற எண் 208/2015 வழக்கானது சிபிசிஐடி காவல் நிலையத்தாரால் மறுவழக்காக பதிவு செய்யப்பட்டுள்ள விவரத்தை இந்த நீதிமன்றத்தில் சொல்லியுள்ளீர்களா?

ப: சொல்லியிருக்கிறேன்.

கே: குற்ற எண் 206/2015 மற்றும் குற்ற எண் 208/2015 சம்பந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்?

ப: இல்லை.

கே: அதனால் மேற்கண்ட வழக்குகள் சம்பந்தமாக இந்த வழக்கில் சொல்லியிருப்பதாக சொல்வது தவறு என்றால்?

ப: சரியல்ல.

கே: குற்றம் சாட்டப்பட்ட எதிரி சுரேஷ் Special team க்கு யாரால் கொண்டுவரப்பட்டார் என்ற விவரத்தை தாங்கள் ஆவணங்கள் மூலமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறீர்களா என்றால்?

ப: ஆவணங்கள் இல்லை.

கே: திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த சுரேஷ் என்பவர் Special team ல் சேரவேண்டுமானால் திருவண்ணாமலை மாவட்ட எஸ்பியின் உத்தரவு மற்றும் கடவுச்சீட்டு பெற்றுதான் சேர வேண்டும் என்ற விவரம் தங்களுக்கு தெரியுமா?

ப: இந்த வழக்கில் வாய்மொழி மூலமாக உத்தரவு கொடுக்கப்பட்டது.

கே: அவர் கடவுச்சீட்டு பெற்றுதான் Special team–ல் இணைக்கப்பட்டுள்ளார் என்றால்?

ப: அது குறித்த விவரம் எனக்கு தெரியாது.

கே: ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு அனுப்பப்படும்போது அந்த மாவட்டத்தின் உயர் அதிகாரியான டிஐஜியிடமிருந்து அனுமதி பெற்றுத்தான் அனுப்பப்பட வேண்டும என்ற விவரத்தை பற்றி விசாரணை செய்தீர்களா?

ப: இந்த வழக்கில் வாய்மொழியாக மட்டும்தான் உத்தரவிடப்பட்டிருந்தது.

கே: எஸ்பி முத்தரசி டிஐஜியிடம் சொல்லி டிஐஜி உத்தரவின் பேரில் Special team–ல் சேர்ந்துள்ளார் என்றால்?

ப: வாய்மொழி உத்தரவின்படிதான் சேர்ந்துள்ளார். டிஐஜி வாய்மொழி உத்தரவுதான் போட்டுள்ளார், எழுத்து மூலமான உத்தரவு இடவில்லை.

கே: வாய்மொழி உத்தரவுதான் என்று தங்களுக்கு எப்படி தெரியும் என்றால்?

ப: முந்தைய விசாரணை அதிகாரி விசாரித்த விவரங்களில் இருந்து தெரியும்.

கே: முந்தைய விசாரணை அதிகாரி இது சம்பந்தமாக விசாரிக்கவில்லை என்றால்?

ப: சரியல்ல.

கே: ஒவ்வொரு விசாரணை அதிகாரிக்கும் Pocket note book என்று உள்ளதா என்றால்?

ப: எங்களுக்கு இல்லை.

கே: இது சம்பந்தமாக தாங்கள் Case dairy ல் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ?

ப: நான் எதுவும் குறிப்பிடவில்லை.

கே: 6ம் எதிரி குற்ற எண் 158/2015 என்ற வழக்கில் சம்பந்தப்பட்டவர் என்பதற்கு அவர் மீது நடவடிக்கை எடுக்க அவரை அனுப்பிய மேல் அதிகாரியிடம் உத்தரவு ஏதேனும் பெற்றீர்களா?

ப: இசைவு ஆணை (Sanction) வழங்கக்கேட்டு கடிதம் அனுப்பப்பட்டு பதில் பெறப்பட்டுள்ளது.

கே: அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா?

ப: பதில் கடிதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கே: 17.06.2015, 18.06.2015 ஆகிய தேதிகளில் 6ம் எதிரி பள்ளிக்கொண்டா சரகத்திலோ அல்லது ஆம்பூர் சரகத்திலோ இல்லை என்றும் அவர் ஜவ்வாதுமலையில் குற்ற எண் 206/2015 மற்றும் 208/2015 வழக்குகள் தொடர்புடைய மணி என்பவரை தேடிப்பிடித்து கொண்டு வருவதற்காக உயர் அதிகாரிகளால் அனுப்பப்பட்டார் என்றால்?

ப: சரியல்ல.

கே: சரியல்ல என்பதை நிரூபிக்க தகுந்த ஆதாரங்களை தாக்கல் செய்துள்ளீர்களா?

ப: ஆவணங்கள் இல்லை. சாட்சிகள் சொல்லியுள்ளார்கள்.

கே: எந்த சாட்சிகள் சொல்லியுள்ளார்கள் என்றால்?

ப: சாட்சிகள் அருணாச்சலம் மற்றும் சிவா ஆகியோர்கள்.

கே: மேற்கண்ட சாட்சிகளை எந்த இடத்தில் விசாரணை செய்தேன் என்றால் ?

ப: நான் அவர்களை அவரகளது வீட்டில் வைத்து விசாரணை செய்தேன்.

கே: வீட்டில் வைத்து விசாரித்ததாக தாங்கள் சொல்வது முற்றிலும் பொய் என்றால்?

ப: சரியல்ல.

கே: 5ம் எதிரி முரளி 18.06.2015 தேதியன்று வேலூர் ஓட்டேரி பகுதிக்கு குற்ற எண் 206/2015 சம்பந்தப்பட்டள்ள பாலாஜி என்பவரை எதிரி சபாரத்தினத்தோடு சேர்ந்து விசாரணைக்கு சென்றிருந்தனர் என்றும் அன்று சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய அந்த இடத்திலோ அந்த நேரத்திலோ அவர் இல்லை என்றால்?

ப: சரியல்ல.

கே: டிஎஸ்பி கணேசனை விசாரித்தபோது தாங்கள் குற்ற எண் 206/2015 மற்றும் குற்ற எண் 208/2015 வழக்குகள் சம்பந்தமாக இந்த வழக்கு சம்பந்தமான விசாரணையில் எதிரிகளை பற்றிய Movements பற்றி ஏதேனும் ஆவணங்கள் அவரிடமிருந்து பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா ?

ப: ஆவணங்கள் இல்லை.

கே: Special team என்பது வேறு Shadow duty என்பது வேறு என்ற விவரம் தங்களுக்கு தெரியுமா என்றால்?

ப: தெரியும். Special team என்பது குறிப்பிட்ட அலுவலுக்காக நியமிக்கக்கூடிய சிறப்பு குழு. Shadow duty என்பது எதிரி மற்றும் போலீஸ் காவலில் வைக்கப்படுகின்ற எதிரியை கண்காணிப்பதற்காக நியமிக்கப்படுகின்ற அலுவல் ஆகும்.

கே: குற்ற எண் 208/2015 வழக்கில் தங்கவேல் டிஎஸ்பியை விசாரிப்பதற்காக உருவாக்கப்பட்ட Shadow duty என்றால்?

ப: டிஎஸ்பி தங்கவேலுவை குற்ற எண் 208/2015 வழக்கில் போலீஸ் காவலில் எடுக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தபோது கண்காணிப்பதற்காக Shadow duty போடப்பட்டிருந்தது.

கே: இந்த குழுவில் முழு நேரமும் முழுமையாக டிஎஸ்பியுடன் பள்ளிக்கொண்டா காவல் ஆய்வாளர் 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜ் ஆம்பூரில் இருந்தார் என்றும் ஆம்பூரில்தான் குற்ற எண் 208/2015 வழக்கு விசாரணை நடந்தது என்றால்?

ப: 1ம் எதிரி Shift முறைப்படி அலுவல் செய்துள்ளார். முழுமையாக ஆம்பூரில் இல்லை.

கே: முழுமையாக ஆம்பூரில் பணியில் இல்லை என்று சொல்லும் நான் அவர் வேறு பணிக்கோ அல்லது வெளியில் சென்றாலோ அந்த விவரங்கள் முழுவதும் Case diary–ல் பதிவாகியிருக்கும் என்றால்?

ப: சரியல்ல. அந்த விவரங்கள் அனைத்தும் குறிப்பிடப்பட வேண்டியதில்லை.

கே: குற்ற எண் 5/2015 என்ற வழக்கு Custodial death என்று ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளேன் என்றால்?

ப: சரிதான்.

கே: Custodial death என்றால் Law enforcement அல்லது Police personnel ஐதான் எந்த காவல் நிலையத்தில் எந்த இடத்தில் நடந்தது என்று விசாரிக்க முடியும் என்றால்?

ப: சரிதான். இந்த வழக்கானது காவல் நிலையத்திலிருந்து அனுப்பப்பட்ட பிறகு ஷமில் பாஷாவின் இறப்பிற்கான காரணம் குறித்த சந்தேகம் இருந்ததால் அது தொடர்பான வழக்காக விசாரிக்கப்பட்டுள்ளது.

கே: General diary, Sentry Book, Case diary ஆகியவைகளை கைப்பற்றினால் மட்டுமே அதில் இருக்கும் தகவல்களை வைத்துதான் 1ம் எதிரி அங்கிருந்தார் இங்கிருந்தார் என்று சொல்ல முடியும் என்றால்?

ப: அந்த பதிவேடுகள் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் பதிவுகள் ஏதுமில்லை.

கே: குற்ற எண் 206/2015 வழக்கின் தொடர்ச்சியான 208/2015 ஆகிய வழக்குகளில் விசாரணையில் ஈடுபட்டிருந்த எதிரிகள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் உள்ள Rough duty roaster மற்றும் Duty roaster, GD entry, Sentry book மற்றும் இந்த வழக்கு சம்பந்தமான Case diary–ல் எந்தவிதமான குறிப்புகளும் இல்லை என்றால்?

ப: GD entry, Sentry book ஆகியவற்றில் பதிவுகள் இல்லை. Rough duty roaster and Duty roaster ஆகிய பதிவேடுகளை பார்த்துதான் சொல்ல முடியும். சாட்சி அ.த.சா.ஆ.30 மற்றும் 31 ஆகியவைகளை பார்வையிட்டு அவர்களின் பெயர் பதிவுகளில் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறார்.

கே: மருத்துவ ஆவண காப்பாளர் திரு.நேரு அவரின் வாக்குமூலத்தில் மருத்துவமனையிலிருந்து தப்பித்து செல்லும்போது அது சம்பந்தமாக மருத்துவ அதிகாரி புகார் கொடுப்பது வழக்கம் என்று சொல்லியுள்ளார் என்றால்?

ப: என்னுடைய விசாரணையில் அவர் அவ்வாறு சொல்லவில்லை.

கே: அவருடைய வாக்குமூலத்தில் அவ்வாறு உள்ளது என்றால்?

ப: சரியல்ல.

கே: சாட்சி நேரு என்பவர் என் விசாரணையின்போது காயம்பட்டவர்கள் அல்லது விபத்தில் அடிப்பட்டவர்கள் மருத்துவமனைக்கு முதலில் வரும்போது I.P.Number கொடுப்பார்கள் என்றும் அதே காயம்பட்ட நபர் மருத்துவ ஆலோசனைக்கு மாறாக வெளியில் சென்று மீண்டும் அதே அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும்போது வேறு I.P.Number கொடுப்பார்கள் என்று சொல்லியுள்ளார் என்றால்?

ப: என்னிடம் அவ்வாறு சொல்லவில்லை.

கே: மருத்துவர் சரவணகுமார் என்பவரை நான் விசாரித்துள்ளேனா என்றால்?

ப: நான் விசாரிக்கவில்லை. எனக்கு முந்தைய விசாரணை அதிகாரி விசாரித்துள்ளார்.

கே: அ.த.சா.ஆ.48 ஆவணத்தில் I.P.Number என்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்?

ப: I.P.Number 44913. சாட்சி ஆவணத்தை பார்வையிட்டு 4 மாதிரியும் தெரிகிறது H மாதிரியும் தெரிகிறது என்று சாட்சியம் அளிக்கிறார்.

கே: மருத்துவர் சரவணக்குமாரை விசாரித்தபோது 19.06.2015 அன்று கொடுக்கப்பட்ட In–patient case sheet மேலே கண்ட I.P.Number குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்?

ப: ஆம்.

கே: அதன் பின்னிட்டு Abscond ஆகி மீண்டும் மருத்துவமனையில் Admit ஆனபோது புதிய I.P.Number 35471 (அ.த.சா.ஆ.51) என்று கொடுக்கப்பட்டுள்ளது என்றால்?

ப: உள்ளது.

கே: அதேபோல் அ.த.சா.ஆ.50 ல் I.P.Number 35471 என்று உள்ளது என்றால்?

ப: உள்ளது.

கே: அ.த.சா.ஆ.47 ல் குறிப்பிட்டுள்ள காயங்கள் மூன்று காயங்கள் என்றால்?

ப: சரிதான்.

கே: ஷமீல் பாஷா என்பவர் மருத்துவமனையிலிருந்த தலைமறைவாகி வேறு இடத்தில் வேறு நபர்களால் அவர் தாக்கப்பட்டு அவர் மீண்டும் 22.06.2015 அன்று புதிய I.P.Number 35471 என்று கொடுக்கப்பட்டு அவருக்கு சிகிச்சை செய்யும்போது நிறைய காயங்கள் இருந்தன என்பது தெளிவாகிறது என்றால்?

ப: சரியல்ல.

கே: பின்னிட்டு அவர் தாக்கப்பட்டதால்தான் இரண்டாவது முறையாக அவர் விபத்து பிரிவில் சேர்க்கப்படும்போது I.P.Number 35471 என்று கொடுக்கப்பட்டுள்ளது என்றால்?

ப: சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 04.07 மணி**

M ELAVARASAN Digitally signed by M ELAVARASAN Date: 2025.08.01 16:24:30 +0530